**யேகோவாநிசி**

## இயேசுவுக்கே புகழ் சபை

**காரைக்குடி**

## ஜெப விண்ணப்பம் - 2022

1. இந்த ஆண்டு சபையின் தரிசனமான 100 புதிய குடும்பங்களை தேவன் இந்த ஆண்டுக்குள் தர...
2. இந்த ஆண்டு இறுதிக்குள் 500 ஆத்துமாக்கள் நம் சபையில் அங்கத்தினர்களாக இருக்க…
3. இந்த ஆண்டு பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள், வக்கீல்கள், இன்ஜினியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், தாசில்தார்கள், மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்கள், போக்குவரத்து துறையில் பணிபுரிகிறவர்கள், இரயில்வே துறையில் பணிபுரிகிறவர்கள், காவல் துறையில் பணிபுரிகிறவர்கள், வங்கியில் பணிபுரிகிறவர்கள், அஞ்சலகத்தில் பணிபுரிகிறவர்கள், பவர் கிரிட்டில் பணிபுரிகிறவர்கள், பெல்-ல் பணிபுரிகிறவர்கள், சிக்கிரியில் பணிபுரிகிறவர்கள், வருவாய் துறையில் பணிபுரிகிறவர்கள், பள்ளி கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகள், கூலி தொழிலாளிகள், ஏழை எளிய ஜனங்கள் மற்றும் வேலையில் மாற்றலாகி வருகிறவர்களை தேவன் நம் சபைக்கு கொண்டு வர….
4. நம் சபை விசுவாசிகள் யாவரும் ஆத்தும பாரத்தோடு,தேவன் நமக்கு தந்திருக்கிற தரிசனத்தில் இணைந்து ஊழியம் செய்ய தேவையான ஞானத்தை தேவன் தர…
5. நம் சபையில் உள்ள ஒவ்வொரு விசுவாச குடும்பமும் இந்த ஆண்டு இறுதிக்குள் 5 புதிய ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி நம் சபைக்கு கொண்டு வர..
6. நம் சபை விசுவாச குடும்பத்தில் இரட்சிக்கப்படாத கணவன், மனைவி, பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு குடும்பமாய் சபைக்கு வர, நம் சபையில் இரட்சிக்கப்பட்டு தற்போது சபையை விட்டு சென்றவர்களை மீண்டும் தேவன் நம் சபைக்கு கொண்டு வர…
7. நம்முடைய ஊழியத்திற்கு நல்ல ஊழிய பாரம் நிறைந்த உண்மையுள்ள, திறமையுள்ள ஆட்களை கர்த்தர் தரும்படியாக (நிர்வாகத்திற்கு, ஜெப ஊழியத்திற்கு, வீடு சந்திப்பு ஊழியத்திற்கு)…
8. நம் சபையின் மூலம் நடைபெற்று வருகிற ஞாயிறு ஆராதனை,வாக்குத்தத்த ஆராதனை,உபவாச ஜெபம்,துதி ஆராதனை,அபிஷேக கூட்டம்,வாலிபர் கூட்டம்,ஆத்தும ஆதாய பயிற்சி,சிறுவர் ஊழியம்,வேதபாட வகுப்பு,பராமரிப்பு குழு,சங்கிலி தொடர் ஜெபம், ஜாமக்காரர் ஜெபம்,பெண்கள் ஜெபம், ஆண்கள் ஜெபம் யாவும் தடையில்லாமல் நடைபெற, சபை விசுவாசிகள் யாவரும் உற்சாகமாய் வந்து கலந்து கொள்ள…

9. நம் சபையின் கட்டுமான பணி தேவ சித்தத்தின்படி ஆரம்பிக்கப்பட,தேவைகள் யாவும் சந்திக்கப்பட, உற்சாகமாய் கொடுக்க கூடிய உள்ளங்களை தேவன் எழுப்பி தர…
10. நம் சபையின் தலைமை போதகர் அவர்களை தேவன் ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்த, மேய்யப்பனின் மன்னா, புதிய பாதை, சாத்தானின் ஆழங்கள், சுகமளிக்கும் ஆராதனை தடையில்லாமல் ஒளிபரப்பாக, பெத்தேல் ஊழியத்தின் திட்டங்களை தேவன் நிறைவேற்ற, தேவன் கொடுத்த உலக அளவிலான ஊழியத்தில் தேவன் தம்முடைய தாசரை வல்லமையாய் பயன்படுத்த, குடும்பத்தை தேவன் வேலியடைத்து பாதூக்க…

    மிஸ்பா இயேசுவுக்கே புகழ் சபையின் போதகர் இம்மானுவேல் அவர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த, ஊழியத்தில் கொடுக்கப்பட்டுள்ள தரிசனங்களை தேவன் நிறைவேற்ற, குடும்பத்தை தேவன் வேலியடைத்து பாதுகாக்க…

    யேகோவாநிசி இயேசுவுக்கே புகழ் சபையின் போதகர் பிரின்ஸ் டேனியல் அவர்களை தேவன் ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்த, ஊழியத்தில் தேவ சித்தத்தை நிறைவேற்ற, தேவன் நல்ல சுகத்தை தர, குடும்பத்தை தேவன் வேலியடைத்து பாதுகாக்க…
11. நம் சபை விசுவாசிகள் ஜெபத்திலும், வேதவாசிப்பிலும், உபவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளர, சபை கூடி வருதலை விட்டுவிடாதிருக்க, தசமபாகத்தினாலும், காணிக்கையினாலும் கர்த்தரை கனம் பண்ண, விசுவாசிகள் செய்கிற வியாபாரம் தொழில் செழிக்க, வேலை ஸ்தலத்தில் பதவி உயர்வு கிடைக்க, கடன் பிரச்சனைகள் மாற, வியாதியோடு இருக்கிறவர்கள் வியாதி படுக்கை மாற, குடும்பங்களில் சமாதானம் காணப்பட, படிக்கிற பிள்ளைகளை தேவன் தம்முடைய ஞானத்தால் நிரப்ப, எல்லாவற்றிலும் தேறின பிள்ளைகளாய் இருக்க, படித்து முடித்தவுடன் நல்ல வேலைகள் கிடைக்க, திருமணத்திற்கு காத்திருக்கிற பிள்ளைகளுக்கு ஏற்ற வரன்களை தேவன் கொண்டு வர, குழந்தை பாக்கியத்திற்காய் காத்திருக்கிறவர்களுக்கு தேவன் கர்ப்பத்தின் கனியை ஆசீர்வதித்து கொடுக்க, பிரசவத்திற்கு காத்திருக்கிறவர்களுக்கு சுகபிரசவத்தை தேவன் கட்டளையிட, பிரயாணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாக, சொந்த வீடு இல்லாதவர்களுக்கு தேவன் சொந்த வீடுகளை கட்டி தர,கொள்ளை நோய்களுக்கு தேவன் விலக்கி பாதுகாக்க….
12. இந்திய தேசத்தில் தேவன் எழுப்புதலை கட்டளையிட, சபைகளை, போதகர்களை, விசுவாசிகளை, வழிபாட்டு ஸ்தலங்களை தேவன் பாதுகாக்க, சபைகள் வளர்ந்து பெருக, தேசத் தலைவர் தேவனுக்கு பயந்து நல்ல ஆட்சி செய்திட, ஜனங்களுக்கு பிரயோஜனமான திட்டங்களை கொண்டு வர, எல்லைகளில் தேவ பாதுகாப்பு உண்டாக, நம் தேசத்தை எல்லா வளத்தோடும் தேவன் ஆசீர்வதிக்க…